2003 நவம்பர் 7]

திரு. பி. எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு வட்டம், 80 கிலோமீட்டர் தூரம் கொண்ட பெரிய பரப்பளவு கொண்ட வட்டமாகும். இரண்டு ஒன்றியங்களைக் கொண்டதாகும். இப்பகுதி மக்கள் இதனை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாகக் கோரிக்கை எழுப்பி வருகின்றனர். விதியைத் தளர்த்துகின்றபோது மறுபரிசீலனை செய்து, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஆர். கே. பேட்டை ஒன்றியத்தைப் பிரித்து, ஆர்.கே. பேட்டையை புதிய வட்டமாக அறிவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் புதிதாக ஏற்படுத்த மற்றும் பிரிக்கக் கோரி பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் நகர்மன்றத் தலைவர்களிடமிருந்து ஏராளமான மனுக்கள் வந்த வண்ணம் இருப்பதால், இது தொடர்பாக அளவுகோலை ஏற்படுத்தித் தரக் கோரி அரசுக்கு முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார். அளவுகோல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசின் தற்போதைய நிதிநிலையைக் கருத்தில்கொண்டு புதிய வட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை உருவாக்க ஆய்வுககு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

93—

இடம் மாற்றம்

***19411—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள கிராம நிர்வாக அலுவலர்களை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறுதல் செய்யும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

[2003 நவம்பர் 7

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிராம நிர்வாக அலுவலர்களை மாறுதல் செய்யும்பொருட்டு தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் 'அ' மற்றும் 'ஆ' என இரு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 'அ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களை வருடத்திற்கு ஒருமுறையும், 'ஆ' பிரிவு கிராமங்களில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலர்களை மூன்று வருடத்திற்கு ஒருமுறையும் மாறுதல் செய்ய ஏற்கெனவே ஆணைகள் உள்ளன.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களெல்லாம் கூரை வீடுகளிலும், அந்தந்த ஊர்களிலுள்ள ஏதாவது ஒரு வசதியானவர்களின் வீட்டின் தாழ்வாரத்திலும் அலுவலகம் நடத்தி வந்த அவர்களுக்கு ரூ.70 ஆயிரம் செலவில் மிக அருமையான அலுவலகங்கள் கட்டிக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் எப்போது பணிக்கு வருகின்றார்கள் என்ற விவரம் மக்களுக்குத் தெரிவதில்லை. பொது மக்களின் நலனில் அக்கறை இருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு...*(மணியடிக்கப்பெற்றது)*

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு காலை 2 மணி நேரம், மாலை 2 மணி நேரம் என்று ஏதாவது ஒரு நேரத்தை ஒதுக்கி, அந்நேரத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகத்தில் பணிபுரிய வேண்டுமென்று அவர்களுக்கு அந்த அலுவலக நேரத்தை நிர்ணயிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

2003 நவம்பர் 7]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற அரசு அலுவலர்களைப்போல கிராம நிர்வாக அலுவலர்களும் காலை 10 மணி முதல் மாலை 5-45 மணி வரை பணியில் இருக்க வேண்டும். அவர்கள் பல்வேறு பணிகளுக்காக அந்தந்த கிராமங்களினுடைய உட்கிடை கிராமங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை கட்டாயம் இரண்டு மணி நேரம் அவர்களுடைய அலுவலகத்தில் இருக்கவேண்டுமென்று அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(ஏழாவது பட்டியல்)

1—

மின் விநியோகம்

வினா 22867—திரு. தி. வேல் முருகன்: மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியில் முத்தையா நகர், வேதாந்தம் நகர், ஸ்டேட் பாங்க் நகர் ஆகிய பகுதிகளில் சீராக மின் விநியோகம் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியில் முத்தையா நகர், வேதாந்தம் நகர், ஸ்டேட் பாங்க் நகர் ஆகிய பகுதிகளில் மும்முனை மின்சாரம் 24 மணிநேரம் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

---

* இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS